RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 214 | ஆகஸ்டு.9 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# முதல்வர் விஜய் தலைமையில் நடந்த எம்.பி.க்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன?

சென்னை: ஆக.9-

தொகுதி மறுவரையறை மசோதா குறித்து விவாதிப்பதற்காக, தவெக அரசு ஏற்பாடு செய்த தமிழக எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தொகுதி மறுவரையறை மசோதாவை மத்திய அரசு கைவிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத்தொடர் கடந்த ஜூலை 20ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் திருத்தப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், தொகுதி மறுவரையறை பணிகள் குறித்து விவாதிப்பதற்காக தமிழக எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு முதல்வர் விஜய் அழைப்பு விடுத்திருந்தார். சென்னை கலைவாணர் அரங்கில் முதல்வர் விஜய் தலைமையில் இன்று நடைபெற்ற கூட்டத்தை புறக்கணிப்பதாக பிரதான எதிர்க்கட்சிகளான திமுக, அதிமுக கட்சிகள் அறிவித்தன. மேலும் பாமக, மநிம, தேமுதிகவின் எம்.பிக்கள் என மொத்தம் 37 எம்.பி.க்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அதே நேரத்தில் தவெக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸின் 11 எம்.பிக்கள், விசிக, சிபிஎம், சிபிஐ கட்சிகளின் தலா 2 எம்.பிக்கள், ஐயுஎம்எல், மதிமுகவின் தலா எம்.பி என மொத்தம் 19 பேர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். காங்கிரஸ் எம்.பி சுதா மட்டும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.




சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அனைத்து கட்சிகளின் எம்.பிக்களும் தங்கள் கருத்தை தெரிவித்தனர். தவெக அரசின் சார்பில் முதல்வர் விஜய், அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், நிர்மல்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், 'தமிழகத்தின் உரிமையை பறிக்கும் வகையில் தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சித்து வருகிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி மறுவரையறைக்கு எதிராக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது" என்றார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு பின்னர் பேசிய விசிக எம்.பி திருமாவளவன், 'முதல்வர் தலைமையில் நடந்த எம்.பி.க்கள் கூட்டத்தில் நாங்கள் கலந்துகொண்டோம். மூத்த தலைவர் ப.சிதம்பரம் பங்கேற்றார். அனைத்துக் கட்சிகளின் சார்பாக எம்.பிக்கள் தங்கள் கருத்தை பேசினார்கள். நிறைவாக முதல்வர் விஜய் பேசினார்.

அதன்பின்னர், தொகுதி மறுவரையறை மசோதாவை மத்திய அரசு கைவிட வேண்டும். மக்களவையில் 543 என்ற எண்ணிக்கையும், தமிழகத்துக்கான 39 என்ற எண்ணிக்கையும் தொடர வேண்டும் என்பது தொடர்பாக ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எண்ணிக்கையை கூட்டுவதால் நாடாளுமன்றம் கேலிக்கூத்தாகிவிடும். எனவே தொகுதி மறுவரையறை கூடாது என்ற அடிப்படையில் அனைத்து எம்.பிக்களும் கருத்துகளை முன்வைத்தோம்" என்றார்.

இந்தக் கூட்டத்துக்கு பின்னர் பேசிய காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம், "தொகுதி மறுவரையறையில் தமிழகம் எந்த விதத்திலும் பாதிக்க கூடாது என்ற ஒருமித்த கருத்தை நாங்கள் கொண்டுள்ளோம். இதனை நாங்கள் முதல்வரிடம் தெரிவித்தோம். மக்களவையில் 543 என்ற எண்ணிக்கையும், தமிழகத்துக்கான 39 என்ற எண்ணிக்கையும் பாதுகாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மக்களவையில் 543 பேர் பேசுவதற்கே இப்போது நேரம் இல்லை. இதனை 850 ஆக அதிகரித்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச நேரமே இருக்காது" என்றார்.

## கோவையில் பரபரப்பு!

# லாட்டரி மார்ட்டின் நிறுவனங்களில் அமலாக்கத்துறை சோதனை

கோயம்புத்தூர், ஆக.9-

கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புகழ்பெற்ற லாட்டரி தொழிலதிபர் சாண்டியாகோ மார்ட்டின் நிறுவனங்களுக்குச் சொந்தமான அலுவலகங்கள் மற்றும் தொடர்புடைய நபர்களின் வீடுகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிரடிச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.




சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பான புகார்களின் அடிப்படையில் பி.எம்.எல்.ஏ. சட்டத்தின் கீழ் இந்த விரிவான சோதனையானது தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. மார்ட்டினுடன் தொடர்புடைய பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் மற்றும் அரசியல் கட்சி நிர்வாகிகளின் இடங்களிலும் இந்தச் சோதனைகள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

லாட்டரி மார்ட்டின் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

அமலாக்கத்துறையின் இந்த அதிரடிச் சோதனையானது காலை முதல் பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் மத்திய பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பும் பல இடங்களில் பலப்படுத்தப்பட்டுள்ளது. சோதனை நடைபெறும் குறிப்பிட்ட இடங்கள் மற்றும் அங்குப் பறிமுதல் செய்யப்பட்ட முக்கிய ஆவணங்கள் குறித்த எந்தவொரு அதிகாரப்பூர்வமான விவரங்களும் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்தத் தொடர் சோதனைகள் காரணமாகத் தொழிலதிபர் மார்ட்டின் தொடர்புடைய வட்டாரங்களில் பெரும் பரபரப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோதப் பணப்பரிமாற்ற வழக்குகளின் அடிப்படையில் நடக்கும் இந்த விசாரணையின் முடிவில் கூடுதல் தகவல்கள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து நடைபெறும் இந்தச் சோதனைகள் குறித்த அடுத்தடுத்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகும் போது முழுமையான விவரங்கள் தெரியவரும். கோவையில் உள்ள அவரது நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய இடங்கள் முழுவதிலும் மத்திய அரசின் அதிகாரிகள் தீவிரமான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் ஊதிய உயர்வு

சென்னை, ஆக.9-

தமிழ்நாட்டில் பணியாற்றும் 108 ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்குச் சட்டப்படி 8.33% போனஸ் தொகை மற்றும் 2022-23ம் ஆண்டிற்கான 25% ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் எனத் தொழில் தகராறு தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த பல ஆண்டுகளாகத் தங்களது உரிமைகளுக்காகப் போராடி வந்த ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று வந்துள்ள இந்த முக்கியத் தீர்ப்பு அவர்களிடையே பெரும் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அவசரகால சேவையில் தங்களது உயிரைப் பொருட்படுத்தாமல் உழைத்து வரும் பணியாளர்களுக்கு இந்த அறிவிப்பு மிகப்பெரிய நன்மையாக அமைந்துள்ளது.

விழாக்காலங்களில் வழங்கப்படும் பண்டிகை படியை ஒருபோதும் போனஸாகக் கருத முடியாது என்று தீர்ப்பாயம் மிகத் தெளிவாகத் தன் உத்தரவில் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள ஊதிய உயர்வு மற்றும் போனஸ் பாக்கித் தொகையைச் சம்பந்தப்பட்ட ஆம்புலன்ஸ் சேவை நிறுவனம் இரு மாதங்களுக்குள் வழங்கிட வேண்டும் என்றும் திட்டவட்டமாக ஆணையிட்டுள்ளது. நிறுவனத்தின் முறையற்ற வாதங்களைத் தள்ளுபடி செய்த தீர்ப்பாயம், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் சாதகமாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நீண்ட காலமாக நிலுவையில் இருந்த இந்த விவகாரத்தில் தீர்ப்பாயம் சாதகமான தீர்ப்பை வழங்கி இருப்பது ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பாக்கித் தொகையை முழுமையாக வழங்காவிட்டால் சட்டப்படி அடுத்தடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குச் சேவை செய்யும் பணியாளர்களின் நலன் காக்கப்படும் வகையில் வந்துள்ள இந்த உத்தரவை அனைத்துத் தரப்பு மக்களும் பெரிதும் வரவேற்று வருகின்றனர்.

# முதல்வர் விஜய் ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.க., பங்கேற்காது, ஏனெனில்...' கனிமொழி விளக்கம்

சென்னை, ஆக.9-

"யாரும் கேட்காமலேயே அவசர அவசரமாகத் தொகுதி மறுவரையறைக்கான கலந்தாய்வுக் கூட்டத்தை தவெக அரசு தற்போது கூட்டியிருப்பது காவிரி பிரச்சினையில் இருந்து மக்களை திசைதிருப்பும் அரசியல் நாடகமேயன்றி வேறில்லை. இதில் திமுக பங்கேற்காது" என்று திமுக எம்.பி கனிமொழி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "தொகுதி மறுவரையறை எனும் ஆபத்தை முதன்முதலில் எடுத்துரைத்து எச்சரித்தவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின்தான். தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைத்து கூட்டம் நடத்தி, தமிழகத்தின் கோரிக்கைகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றினார். அதன் தொடர்ச்சியாக, இந்தியாவில் உள்ள பல்வேறு மாநில முதல்வர்கள் மற்றும் கட்சித் தலைவர்களை அழைத்து நியாயமான தொகுதி மறுவரையறைக்கான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தையும் சென்னையில் நடத்திக் காட்டினார்.

'தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்' என்ற முழக்கத்தை முன்வைத்து ஒட்டுமொத்த மாநிலத்தையும் எங்கள் தலைவர் ஓரணியில் திரட்டிக் காட்டினார்.

அனைவரது எதிர்ப்பையும் மீறி, நாடாளுமன்றத்தில் இது தொடர்பான சட்ட முன்வரைவை பாஜக கொண்டுவந்தபோது, சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பணிகளுக்கு இடையிலும் இதனை எதிர்த்துப் போராடினார். கருஞ் சட்டை அணிந்து, கருப்புக் கொடி ஏற்றி, சட்ட வரைவின் நகலைக் கொளுத்தினார். நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேறாமல் தோல்வியடையச் செய்தார்.

தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தொகுதி மறுவரையறை சட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றப் போவதாக எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு குறித்து எந்தத் தகவலும் இல்லாத நிலையில் அது இன்னும் கையில் கிடைக்கப்பெறாத நிலையில், இதில் புதிதாக விவாதிக்கவும் எதுவும் இல்லை.

தமிழகத்தின் நிபந்தனைகளை ஏற்கனவே நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் வாயிலாகத் தெரிவித்து விட்டோம்:

›› 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று கடந்த 2000ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் அவர்கள் உறுதி அளித்தவாறே, தற்போதும் இந்த வரையறை 2026ல் இருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று ஒன்றிய அரசு உறுதி அளிக்க வேண்டும். மேலும், அரசமைப்பு சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

›› மேலும், நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில், "1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

›› தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசு மாற்றம் செய்யக் கூடாது.

›› தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழகம் எதிரானதாக இல்லை அதேசமயம் கடந்த ஐம்பதாண்டுகளாக சமூக, பொருளாதார நலத்திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது எனவும் அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

அந்த நிலைப்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் இப்போதும் உறுதியாக நிற்கிறது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய தேசிய முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் இப்போதும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கும்போது இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்துக்கான தேவை என்ன? முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அவர்களை மாற்றுவதற்குத்தான் இந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறதா?

தமிழகத்தின் உரிமைகளுக்கு எதிரான, நமது பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையிலான தொகுதி மறுவரையறையைத் திமுக நிச்சயம் எதிர்க்கும். அதில் எள்ளளவும் எங்களின் மாற்றம் இல்லை.

ஆனால், காவிரிப் பிரச்சினைக்காகத் தமிழகம் முழுவதும் தற்போது போராட்டம் நடைபெற்று வருகிறது. மேகதாட்டு அணை தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென தமிழகத்தின் பல்வேறு கட்சிகளும் வலியுறுத்தி வருகிறார்கள். அனைவரும் கேட்கும் அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தாமல், அதுகுறித்து வாயும் திறக்காமல் தவெக அரசு கள்ள மவுனம் காக்கிறது. யாரும் கேட்காமலேயே அவசர அவசரமாகத் தொகுதி மறுவரையறைக்கான கலந்தாய்வுக் கூட்டத்தைத் தவெக அரசு தற்போது கூட்டியிருப்பது காவிரி பிரச்சினையில் இருந்து மக்களைத் திசைதிருப்பும் அரசியல் நாடகமேயன்றி வேறில்லை.

தொகுதி மறுவரையறைக் கலந்தாய்வுக் கூட்டத்தில் திமுக பங்கேற்க வேண்டுமென்றால் அதற்கு முன்பாக தமிழகத்தின் உயிர்ப்பிரச்சினையான மேகேதாட்டு அணை குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என நிபந்தனை விதித்து எங்கள் கழகப் பொதுச் செயலாளர் துரை முருகன், நேற்று திமுகவின் நிலைப்பாட்டை அறிக்கை வாயிலாகத் தெளிவுபடுத்திவிட்டார்.

எனவே, தமிழக அரசியல் கட்சிகளின் ஒருமித்த கோரிக்கையை நிராகரித்துள்ள தவெக அரசின் இன்றைய கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.

தமிழகத்தின் காவிரி உரிமையிலும் டெல்டா உழவர்கள் மீதும் இந்த அரசுக்கு உண்மையாகவே அக்கறை இருக்கிறதென்றால், மேகேதாட்டு அணைக்கு எதிராகச் சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று ஒன்றிய ஜல் சக்தி அமைச்சரிடம் நேரில் வழங்கிடத் தமிழக அரசின் பிரதிநிதிகள் முன்வர வேண்டும். தமிழக அரசின் சார்பில் பிரதிநிதிகளை அனுப்ப தமிழக முதல்வர் தயாரா? என்று கனிமொழி தெரிவித்துள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**





## ஊத்துக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளி 2000 - 2001ம் ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு படித்த முன்னாள் மாணவர்கள் சங்கமம்

திருவள்ளூர், ஆக.9-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 20002001.ம் ஆண்டு 12ம் வகுப்பு பயின்ற முன்னாள் மாணவர்கள் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பள்ளியின் அலுவலகப் பணிகளுக்காக மினி ஜெராக்ஸ் மிஷின் நன்கொடையாக வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியர் வி.எம் சுரேஷ் தலைமை தாங்கினார் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வி.தமிழ்ச்செல்வன், அன்பு மாணவர்கள் இல்லாம் நிறுவனர் மதனம்பேடு நித்யராஜ் முன்னிலை வகித்தனர் இந்நிகழ்ச்சியை பள்ளியின் ஆசிரியர் துரைப்பாண்டி ஒருங்கிணைத்தார் முன்னாள் மாணவர்களை பள்ளி முன்னாள் மாணவி அம்பிகா நடராஜன் ஒருங்கிணைத்து சிறப்பாக வழி நடத்தினார்கள்

## உலகத்தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, பொது மக்களுக்கு விழிப்புணர்வு



தேனி, ஆக.9-

தேனி மாவட்டம், தேனி பங்களாமேடுப் பகுதியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப்பணிகள் திட்டம் சார்பில் உலகத்தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிறப்பு விழிப்புணர்வு நடைபெற்ற பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். தாய்ப்பாலின் முக்கியத்துவம், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் தாய்ப்பாலின் பங்கு, முதல் ஆறு மாதங்கள் முழுமையாக தாய்ப்பால் மட்டுமே வழங்குவதன் அவசியம் உள்ளிட்ட விழிப்புணர்வை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் ஆண்டுதோறும் உலக தாய்ப்பால் வார விழா ஆகஸ்டு 1 முதல் 7 வரை உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் பங்களாமேடு பகுதியில் "தாய்ப்பானூட்டுதல் வளர்ச்சிக்கான வாழ்க்கையின் ஆரம்பம், தாய்ப்பானூட்ட ஆதரவளிக்கும் அமைப்புகளை பலப்படுத்துவோம்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, தாய்ப்பாலின் முக்கியத்துவம் மற்றும் மகத்துவம் குறித்து தாய்மார்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் தாய்ப்பால் வழங்குவதன் மூலம் தாய் மற்றும் குழந்தை இருவரின் ஆரோக்கியமும் மேம்படும் என்பதை வலியுறுத்தும் வகையில் பதாகைகள் ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் பேரணியில் பங்கேற்றனர். இப்பேரணி தேனி பங்களாமேடுப் பகுதியில் தொடங்கி பழைய பேருந்து நிலையம் வரை சென்று நிறைவுப்பெற்றது.

இப்பேரணியில் அங்கன்வாடிப் பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் கிராம சுகாதார பயிற்சி மாணவர்கள் உட்பட சுமார் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, கர்ப்பிணி தாய்மார்கள் கர்ப்ப காலங்களில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து பல்வேறு தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை மாவட்ட வருவாய் அலுவலர் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கி ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ரேவதி, மாவட்ட தாய்சேய் நல அலுவலர், வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு

நீலகிரி, ஆக.9-

நீலகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருட்கள் பெற்று வரும் அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டையில் உள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களின் கைரேகையினை தங்களது நியாயவிலைகடையில் உள்ள P.O.S இயந்திரத்தில் பதிவு செய்திட வேண்டும். நாளது தேதி வரையில் நியாயவிலைக் கடைகளில் நீரிசீசி மேற்கொள்ளாத அனைத்து குடும்ப அட்டை பயனாளிகளுக்கும் 08.08.2026 மற்றும் 09.08.2026 ஆகிய நாட்களில் அனைத்து நியாயவிலைக் கடைகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளதால் இதனை பயன்படுத்திக்கொண்டு விற்பனை முனைய இயந்திரம் மூலமாக கைவிரல் ரேகை/கண் கருவிழி சரிபார்ப்பின் மூலம் eKYC மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. பிறமாநிலம், பிறமாவட்டங்களில் வேலை நிமித்தமாக தங்கி உள்ளவர்கள் அவர்களுக்கு அருகாமையில் உள்ள நியாயவிலை கடையில் குடும்ப அட்டை நகலுடன் சென்று கைவிரல் ரேகையினை பதிவு செய்து கொள்ளலாம் ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா மாவட்ட தண்ணீரு . தெரிவித்துள்ளார்



## குன்னூர் கல்லூரியில் இலவச ரத்த பரிசோதனை மற்றும் ரத்த தானம் மருத்துவ முகாம்

நீலகிரி, ஆக.9-

குன்னூர் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் நகர பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்கள் மற்றும் இலவச ரத்தப் பரிசோதனை ரத்த தானம் முகாம்கள் நடைபெற்று வருகிறது. குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் இலவச ரத்த பரிசோதனை ரத்ததானம் முகாமினை கல்லூரியின் தலைமை பேராசிரியர் ஹேம ஸ்ரீகுமார் . கல்லூரி செயலாளர் சகோதரி அல்போன்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு முகாமினை துவங்கி வைத்தனர். இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் பொது. செயலாளர் மோரிஸ். குன்னூர் செயலாளர் டாக்டர் பிரபு குமார். ஆகியோர் தலைமை வகித்தனர். முகாமினை பேராசிரியை முனைவர் அமுதா ஏற்பாடுகளை செய்திருந்தார். இந்த இலவச ரத்த பரிசோதனை மற்றும் ரத்ததானம் முகாமில் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ரத்த தானம் செய்தனர். மருந்துகளும் வழங்கப்பட்டன இந்த முகாமில் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள். கல்லூரி பேராசிரியைகள். பேராசிரியர்கள். இலவச ரத்த பரிசோதனை மற்றும் ரத்த தானம் முகாமில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.





## ஊத்துக்கோட்டை பேரூர் திமுக இளைஞர்அணி, விளையாட்டு அணி, அயலகஅணி சார்பில் கலைஞரின் 8ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

திருவள்ளூர், ஆக.9-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக இளைஞர், மற்றும் விளையாட்டு மேம்பாடு, அயலகஅணி, சார்பில் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி 8ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மறியாதை செலுத்தி சுமார் 1000 பேர்களுக்கு அன்னதானம் வழங்கி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது இந்த நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ஆர்.ராஜேஷ் தலைமை வகித்தனர் பேரூர் இளைஞரணி அமைப்பாளர் மு.ரஹீம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜி. திலிப்குமார் அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் கோகுல்கிருஷ்ணன் முன்னிலை வகித்தனர் பேரூர் தலைவர் அ.அப்துல்ரஷீத் சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் மு.சம்சுதீன் நினைவஞ்சலி உரையாற்றினார்கள் கவுன்சிலர்கள் ஜீவா கோல்டுமணி வெங்கடேசன் மற்றும் அருண், டில்லிபாபு கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம், நஞ்சநாடு ஊராட்சி பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப்புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்




## பழனி அருகே பள்ளி மாணவர்கள் சார்பாக தூய்மை பணி விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றன

திண்டுக்கல், ஆக.9-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த பாலசமுத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பசுமை பள்ளி திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் பாலசமுத்திரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் இணைந்து வரதராஜ பெருமாள் கோயில் மற்றும் பொது இடங்களில் தூய்மைப் பணிகள் செய்யும் நிகழ்வு நடைபெற்றன. தொடர்ந்து சேகரிக்கப்பட்ட குப்பைகளை பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மக்கும் குப்பை மக்காத குப்பை என இரண்டாகப் பிரித்து கொடுக்கப்பட்டன. மேலும் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் குறித்தும் பல்வேறு விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்து கூறும் வகையில் தூய்மைப் பணிகள் நடைபெற்றன.இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் பிரதீப் குமார் மற்றும் பொறுப்பாசிரியர் பரமசிவம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கி சிறப்பித்தனர்..

## மண்ணிவாக்கத்தில் அருள்மிகு பெரியபாளையத்தம்மன் - அருள்மிகு திருவீதியம்மன் ஆலயத்தில் ஆடித் திருவிழா பக்தி பரவசத்துடன் நடைபெற்றது







மண்ணிவாக்கம், ஆக.9-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு பெரியபாளையத்தம்மன் ஸ்ரீ அருள்மிகு திருவீதியம்மன் ஆலயத்தின் ஆடித் திருவிழா ஆகஸ்ட் 7 முதல் 9, 2026 வரை பக்தி பரவசத்துடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.திருவிழாவின் முதல் நாளான ஆகஸ்ட் 7 அன்று காப்பு கட்டுதல் விழா தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. காலை அம்மனுக்கு சிறப்பு காப்பு அலங்காரம் செய்யப்பட்டு, இராட்சியம்மன் கோயிலிலிருந்து 108 பால்குடங்களுடன் பக்தர்கள் காலை 7.00 மணியளவில் ஊர்வலமாக புறப்பட்டு, பெரியபாளையத்தம்மன் ஆலயத்தை வந்தடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை அம்மன் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து அருள் பெற்றனர்.இந்த விழாவில் பெரியபாளையத்தம்மன் ஆலய நிர்வாகிகள் கௌரவத் தலைவர் ம.வெ. பொன்னுசாமி, தலைவர் இரா. ஆனந்தராஜ், செயலாளர் பொன் தர்மராஜ், பொருளாளர் ஆர்.வேலு என்கின்ற வேல்முருகன், துணைத் தலைவர்கள் வி.குமார், ஜான் என்கின்ற பன்னீர்செல்வம், ஏ.ஜெயராமன், இணைச் செயலாளர் அண்ணாதுரை, துணைச் செயலாளர்கள் எம்.எம். சேகர், பி. குட்டி என்கின்ற ராஜேந்திரன், எம்.எம். சேஷன், ஆர்.பிரபு, கிராம பண்ணக்காரர்கள் எம்.சண்முகம், எம்.ஆர். முனுசாமி, கே.தங்கவேல், ஆலய நிர்வாகிகள் எம்.ஆர்.வீரப்பன், மா.வெ.சோமசுந்தரம், எம்.செல்வராஜ், ஏ.மாரி, எஸ்.ராஜா, எஸ்.சுந்தர், சாமியார் எல்.நடராஜ், எம்.எம்.கணேசன், கே.ஆறுமுகம், இ.ராமு, என்.ரவி, பா.சண்முகம்,எஸ்.கோபி,,ராஜ் என்கின்ற லோகேஸ்வரன், எஸ்.மனோகர், ஆ.கோகுல்ராஜ், ஆர்.ஹரிஹரன், அ.சம்பத் உள்ளிட்டோர் ஏற்பாடுகளை செய்து இருந்தனர்மண்ணிவாக்கம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த திரளான பக்தர்கள் விழாவில் பங்கேற்று அம்மனை வழிபட்டனர். திருவிழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள், விழாக்குழுவினர் மற்றும் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



## கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக சாகுபடிக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் தண்ணீர் திறப்பு

கம்பம், ஆக.9-

தேனி மாவட்டம், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நீர்வளத் துறைசார்பில் ,கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக சாகுபடிக்காகவும், குடிநீர் தேவைக்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தண்ணீரை திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக் கிணங்க தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக சாகுபடிக்கு 14,707 ஏக்கர் நிலங்களுக்கு வினாடிக்கு 200 கன அடி வீதமும், தேனி மாவட்டம் மற்றும் மதுரை மாநகராட்சி குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 150 கன அடி வீதமும் என மொத்தம் வினாடிக்கு 350 கன அடி தண்ணீர் இன்றுமுதல் 120 நாட்களுக்கு நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன்மூலம் கம்பம் பள்ளத்தாக்கு ஆயக்கட்டு பகுதிகளில் உள்ள 14,707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். எனவே, தேனி மாவட்டத்தை சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் இந்நீரை சிக்கனமாக பயன்படுத்தி குறுகிய காலப் பயிர்களை நடவு செய்தும், நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் தேனிபாராளுமன்ற உறுப்பினர்.தங்க தமிழ்செல்வன், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்.க.சபரி ஐங்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்) சையது முகைதீன் இப்ராஹிம், செயற்பொறியாளர்கள் (பெரியாறு வைகை வடிநில கோட்டம்) ச.சிவப்பிரபாகர், சிறப்புக் கோட்ட செயற்பொறியாளர் (பெரியாறு அணை, கம்பம்) சி.செல்வம், உதவி செயற்பொறியாளர்கள் மல்லிகா, ராஜகோபால், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

## திருத்தேர்வளையில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு கூடுதலாக அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை

ஆர் .எஸ். மங்கலம், ஆக.9-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே திருத்தேர்வளையில் இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆகாச முத்துக் காளியம்மன் கோவில் அமைந்துள்ளது சுற்று வட்டார பகுதியில் பிரசித்தி பெற்ற இந்த கோவிலுக்கு ஆண்டுதோறும் ஆடிமாதம் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம் அதை போல் இந்த ஆண்டு 34ம் ஆண்டு லட்சார்ச்சனை விழாவை முன்னிட்டு நேற்று முன் தினம் திருவிழா தொடக்கமாக காப்பு கட்டும்



நிகழ்வு நடைபெற்றது அதனை தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது 14082026 வெள்ளிக்கிழமை மாலை 06 மணிக்கு திருவிளக்கு பூஜையும், 15082026 சனிக்கிழமை காலை 07 மணிக்கு பால்குடம் ,16 082026 அன்று காலை 06 மணிக்கு கணபதி ஹோமம் துர்கா ஹோமம் விஷேச அபிஷேக ஆராதனை இலட்சார்சனை நடைபெற உள்ளது திருவிழாவை முன்னிட்டு சுற்று வட்டார பகுதியில் உள்ள பக்தர்கள் மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் ஐந்தாயிறத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருவதால் கோவில் வளாகத்தில் கூடுதலாக பக்தர்களுக்கு குடிநீர் வசதி புனித நீராடிவிட்டு உடை மாற்றுவதற்கு ஏதுவாக தற்காலிக தடுப்பு மற்றும் கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் திருவிழாவிற்கு பக்தர்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக 14 ம் தேதி காலை முதல் 16 தேதி இரவு வரை தேவகோட்டை,திருவாடானை ,ஆர் எஸ் மங்கலம் உள்ளிட்ட பேருந்து நிலையங்களில் இருந்து காலை 5மணி முதல் இரவு 8 மணி வரை சிறப்பு பேருந்துகள் இயக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பக்தர்கள் மற்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (07.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் மரு.ஞானமீனாட்சி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நா.கலு சிவலிங்கம், துணை இயக்குநர்கள் மரு.ஜெயஸ்ரீ (காச நோய்), மரு.ப்ரீத்தா (தொழு நோய்), மரு.மணிமேகலை (குடும்ப நலம்), தொற்ற நோய் அலுவலர் மரு. அரவிந்த் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.ந.இளையராஜா, ஆகியோர் முன்னிலையில் இன்று (08.08.2026) துவக்கி வைத்து, 1,112 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மகளிர் மேம்பாட்டு திட்ட அலுவலர் சுசீலா ராணி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வெங்கடேசன், அரசு மகளிர் கலைக்கல்லுூரி முதல்வர் கீதா, இந்திய வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் (மஞ்சள் குடோன்) அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மாவட்ட இருப்பு அறை மற்றும் கண்காணிப்பு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் முன்னிலையில் (07.08.2026) அன்று திறக்கப்பட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்டஆட்சியரின் நேர்முகஉதவியாளர் (பொது) பாபு, திருப்பத்தூர் வட்டாட்சியர் நவநீதன், தேர்தல் வட்டாட்சியர் திருமலை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்4வது ஆடி வெள்ளியையொட்டிஅம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடு

கிருஷ்ணகிரி, ஆக.9-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4வது ஆடி வெள்ளியையொட்டி, அம்மன் கோயில்களில் சிறப்பு வழிபாடு நடந்தது.4வது ஆடிவெள்ளியையொட்டி, கிருஷ்ணகிரி புதுப்பேட்டை பெரிய மாரியம்மன் கோயிலில், அம்மனுக்கு அபிஷேகம் செய்து, சிறப்பு பூஜைகள் நடந்தது. அம்மன் மற்றும் கோயில் வளாகத்தில், ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 152 வளையளைக் கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. ராயக்கோட்டை மேம்பாலம் பெரிய மாரியம்மன் கோயிலில், ரூபாய் நோட்டு அலங்காரத்திலும், ராசுவீதி துளுக்காணி மாரியம்மன் கோயிலில் வளையல் அலங்காரத்திலும் அருள் பாலித்தனர்.அதே



போல், பழையபேட்டை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயில், ஜோதி விநாயகர் கோயில் தெரு முத்துமாரியம்மன் கோயில், பழையபேட்டை நேதாஜி சாலை சமயபுர மாரியம்மன் கோயில், ஜக்கப்பன் நகர் ராஜகாளியம்மன் கோயில், அக்ரஹாரம் அம்பா பவானி கோயில், அவதானப்பட்டி மாரியம்மன் கோயில், காவேரிப்பட்டணம் சந்தைப்பேட்டை மாரியம்மன் கோயில், பன்னீர்செல்வம் தெரு அங்காளம்மன் கோயில்களில் அம்மனுக்கு அபிஷேகமும், சிறப்பு அலங்காரமும் நடந்தது. அனைத்து கோயில்களிலும், பக்தர்கள் அம்மனுக்கு கூழ் ஊற்றி வேண்டுதல் நிறைவேற்றினர். இதே போல், மாவட்டம் முழுவதும் உள்ள அம்மன் கோயில்களில் நேற்று சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



## நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.9-

தேனி மாவட்ட காவல்துறையினர்.பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்

ராணிப்பேட்டை, ஆக.9-

இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி ராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் ஜூனியர் ரெட்கிராஸ் (ஜேஆர்சி) சார்பாக போதை ஒழிப்பு மற்றும் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் ஜூனியர் ரெட்கிராஸ் தொடக்கவிழா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ம.மோகனா அவர்கள் வழிகாட்டுதல்படி வி.கே.மாங்காடு அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. முன்னதாக பள்ளியின் தலைமையாசிரியர் கௌரி தலைமை வகித்தார். ஜேஆர்சி ஆலோசகர் பாபுஜி வரவேற்புரையாற்றினார். வாலாஜா அரசுதலைமை மருத்துவமனை மன நல மருத்துவர் பானுமதி, உளவியலாளர் பிரேம்குமார் ஆகியோர் போதைத் தடுப்பு மற்றும் தற்கொலை தவிர்ப்பு குறித்து விழிப்புணர்வு பயிற்சி அளித்தனர். மனநலம் ,உடல்நல ன்,உணவுப் பழக்கம்,தேர்வு பயம் ,நினைவுத்திறன்,கைபேசி பயன்பாடு, நேர மேலாண்மை, உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு குறித்து விளக்கினார். ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்ட அமைப்பாளர் முனைவர் க.வே. கிருபானந்தம் ரெட்கிராஸ் வரலாறு, மனிதநேயம், உடல்நல ன்,சேவை, நட்புணர்வு, ஆண்டு செயல்திட்டம் குறித்து படவிளக்ககாட்சிகளுடன் விளக்கினார். வளரிளம் பருவ மாணவர்கள் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சியில் கலந்துகொண்டனர். மாணவர்களின் சந்தேகங்களுக்கு மருத்துவர் விளக்கமளித்தார். முதல் மற்றும் மூன்றாம் சனிக்கிழமைகளில் ஆற்காடு அரசு மருத்துவமனையில் ஆலோசனைகள் பெறலாம் என்றும் எல்லா நாள்களிலும் வாலாஜா மருத்துவமனைக்கு வரலாம் என்று குறிப்பிட்டனர்.தமிழக அரசின் சுகாதாரத்துறை கட்டணமில்லா எண்கள் 104, 14416, எண்களில் இலவச மனநல ஆலோசனை பெறலாம் எனவும் தெரிவித்தனர். இறுதியாக உதவித் தலைமையாசிரியர் அருண் நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூரிய ஒளி திட்டத்தில் இதுவரை 910 வீடுகளில் சோலார் தகடுகள் அமைக்கப்பட்டுள்ளது என ஆட்சியர் தெரிவித்தார்

கிருஷ்ணகிரி, ஆக.9-

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் பிஎம் சூர்யா கர் முஃப்ட் பிஜ்லி யோஜனா திட்டம் குறித்து மாவட்ட அளவிலான குழு கூட்டம் ஆட்சியர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது: இம்மாவட்டத்தில், பிஎம் சூர்யா கர் முஃப்ட் பிஜ்லி யோஜனா திட்டத்தில் வீடுகளுக்கு சூரிய ஒளி திட்டம் மற்றும் மாதிரி சூரிய ஆற்றல் கிராமம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி கிருஷ்ணகிரி






மாவட்டத்திற்கு 1,575 வீடுகளில் சூரிய ஒளி மின் கட்டமைப்பு ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 910 வீடுகளில் சூரிய ஒளி மின் தகடுகள்(பேனல்கள்) பொருத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளுக்கு சூரிய ஒளி மின் தகடுகள் பொருத்திட ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி நகர்புற பகுதிகளில் குடியிருப்பு நல சங்கங்கள் மற்றும் தேன்கனிக்கோட்டை, தளி பகுதிகளில் உள்ள தகுதியான பண்ணை வீடுகளின் உரிமையாளர்களுக்கான முகாம்கள் நடத்தப்படும். அதற்கான வங்கி கடனை விரைவாக வழங்கிட அறிவுறுத்தப்பட்டது. மேலும் மாதிரி சூரிய ஆற்றல் கிராமம் மகாதேவ கொல்லஹள்ளியில் மேற்கொள்ளபட வேண்டிய தொடர் நடவடிக்கை குறித்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் உமா மகேஸ்வரி, தமிழ்நாடு மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளர் கண்ணன், மகளிர் மேம்பாட்டு திட்ட அலுவலர் சுசீலாராணி, தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் (பொது) ஜெகநாதன், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் நிர்மலதா, தமிழ்நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் (பொது) நளினி, இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார், ஒசூர் மாநகராட்சி பொறியாளர் விக்டர் ஞானராஜ், உதவி பொறியாளர் பவித்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# காளையார்கோவிலில் டாக்டர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவேந்தல்

காளையார் கோவில், ஆக.9-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில்: முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, காளையார்கோவிலில் திமுக சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.கிளைக்கழக செயலாளர்கள் ஆர்.வி.எஸ். அரங்கநாதன், ஜாண் சந்தியாகு ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் முத்து விஜஓ தலைமை வகித்தார். இதில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர், தொழிலதிபர் கோலாந்தி ஆர். கோதண்டபாணி, எஸ்தர் மேரி, விஎஸ்எம். ஸ்டீஃபன், ஒன்றியப் பிரதிநிதிகள் வெல்டிங் கண்ணன், குப்பமுத்து, மகளிரணி துணை அமைப்பாளர் உமாதேவி, குணசேகரன், அருளானந்து, கிளைக்கழக செயலாளர் புலிக்கண்மாய் லிங்கம், டிஎன்எஸ்டிசி மலைச்சாமி, ஆர்.எம்.எல். கருணாநிதி, ஆர்.எம்.எல். முருகேசன், பள்ளித்தம்மம் பொன்னையாராஜ், ஆசிரியர் ஜோஸப், தினேஷ் அரசு, முன்னாள் கவுன்சிலர் பாண்டியராஜன், காளைமணி, தாமோதரன், அயலக அணி போஸ் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.தொடர்ந்து கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# கல்லலில் அறிவியல் இயக்கம் சார்பில் சுதந்திர தின இரத்ததான முகாம் - 33 பேர் இரத்ததானம்



கல்லல், ஆக.9-

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்டம் கல்லல் கிளை சார்பில் மூன்றாம் ஆண்டு இரத்ததான முகாம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 33 பேர் தன்னார்வமாக இரத்ததானம் செய்தனர்.

கிளைச் செயலாளர் விநாயகமூர்த்தி வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை வகித்து, இரத்ததானத்தின் வரலாறு மற்றும் அதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் அழகப்பன், இரத்ததானம் செய்ய இளம் சமுதாயத்தினர் அதிகளவில் முன்வர வேண்டும் என வலியுறுத்தினார். முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் முத்துமாரி இளஞ்செழியன் இரத்ததானத்தின் முக்கியத்துவம் குறித்தும், ஆசிரியை கற்பகவல்லி தானத்தின் சிறப்பு குறித்தும் பேசினர். சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கி அலுவலர் மருத்துவர் முஸாபர்கான், இரத்ததானம் குறித்த விழிப்புணர்வு கருத்துகளை எடுத்துரைத்தார். தலைவர் தனுசு ஸ்டாலின் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆலோசகர் சூசைராஜ், ஆசிரியர்கள் கண்ணதாசன், அண்ணாத்துரை, செம்பனூர் அரசு வட்டார மருத்துவமனை மருத்துவ அலுவலர் ஆகாஷ், மேற்பார்வையாளர் பூமிராஜன், ஆலோசகர் தாமஸ் ஆரோக்கியம், சுகாதார ஆய்வாளர் கார்த்திக் ராஜ், அறிவியல் இயக்க சிறப்பு அழைப்பாளர் சக்திவேல், செயற்குழு உறுப்பினர் மருதநாயகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் அறிவியல் இயக்க உறுப்பினர்கள் தன்னார்வப் பணிகளில் ஈடுபட்டனர். மாவட்ட செயலாளர் பிரபு இரத்ததான முகாமை ஒருங்கிணைத்தார்.



# காளையார்கோவில் அருகே கோவில் பணி தொடர்பாக பிரச்சினை - மாவட்ட நிர்வாகம் தலையிட கிராம மக்கள் கோரிக்கை

சிவகங்கை, ஆக.9-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அருகேயுள்ள அயன் பாப்பாகுடி கிராமத்தில் கோவில் பணி தொடர்பாக இரு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு மாவட்ட நிர்வாகம் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து அயன் பாப்பாகுடி கிராம மக்கள் கூறுகையில், தங்கள் சமூகத்திற்கு பாத்தியப்பட்ட அய்யனார் கோவில் தேரணவாயில் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ள நிலையில், இறுதிக்கட்ட வண்ணப்பூச்சுப் பணிகளை மேற்கொள்ள மற்றொரு தரப்பினர் இடையூறு செய்வதாக தெரிவித்தனர்.மேலும், கோவில் தொடர்பாக தங்களுக்கும் உரிமை இருப்பதாக மற்றொரு தரப்பினர் தெரிவித்து வருவதால் பிரச்சினை நீடித்து வருவதாக கிராம மக்கள் கூறினர்.இந்த விவகாரத்தில் உரிய தீர்வு ஏற்படாதபட்சத்தில், குடும்ப அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்ட அடையாள அட்டைகளை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட்டு கிராமத்தை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.எனவே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# கத்தோலிக்க கிறிஸ்தவ கலை இலக்கிய மன்றம் 18 ம் ஆண்டு நிறைவு விருது வழங்கும் விழா

மதுரை, ஆக.9-

மதுரை ஆரப்பாளையம் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் கத்தோலிக்க கிறிஸ்தவ கலை இலக்கிய மன்றம் சார்பாக 18 ம் ஆண்டு நிறைவு விருது வழங்கும் விழா நடைபெற்றது. மன்ற பொருளாளர் பவுல் பிரகாசம் வரவேற்புரையாற்றினார் மன்ற தலைவர் இளங்கவின் தலைமை வகித்தார் மன்ற செயலாளர் மதுரைவாய்ஸ் கிறிஸ்டோ ஆண்டறிக்கை வசித்தார் மறைந்த முன்னாள் தலைவர் ஜேம்ஸ் மற்றும் சுந்தரத்திற்கு துணைத் தலைவர் அந்தோணி பாரத் நினைவஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மதுரை உயர் மறை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்து பேராசிரியர் சாலமன் பாப்பையா ஆகியோர் சிறந்த கலை இலக்கிய எழுத்தாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தும் புத்தகங்களை வெளியிட்டும் சிறப்பித்தனர் தொடர்ந்து பிரான்சிஸ் பாஸ்டின் மரகத மலர் வெளியிட தேவ சகாயம் சிலுவை மற்றும் அலெக்ஸ்ஞானராஜ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இணைச் செயலாளர் டேவிட்ராஜேந்திரன் சிறுப்புரையாற்றினார் ரொபிஸ்டன் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் கத்தோலிக்க கிறிஸ்தவ கலை இலக்கிய மன்ற நிர்வாகிகள் உறுப்பினர்கள் பல கலந்து கொண்டனர்




■ மதுரை மாவட்டத்தில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற வராற்றுச் சிறப்புமிக்க பகுதிகளை உள்ளடக்கிய திருமலை நாயக்கர் அரண்மனை, சேதுபதி மருத்துவமனை(பாண்டியன் கூட்டுறவு அங்காடி), பத்துத்தூண் சந்து, விளக்குத்தூண், கொத்தவால் சாவடி, திருக்கோயில் தேர்கள், எழுகடல் வீதி, இராய கோபுரம், புதுமண்டபம், விட்டவாசல், நகரமண்டபம்(அச்சுராயன் மண்டபம்) மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் உள்ளிட்ட இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., பாரம்பரிய நடைபயணத்தில் பங்கேற்று வரலாற்றுச் சின்னங்களை சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய தகவல் பலகைகள் மற்றும் அடையாளக் குறியீடுகள் அமைக்கவும் பாராம்பரிய சின்னங்களை முறையாக ஆவணப்படுத்தி பாதுகாக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்.




■ மதுரை மாநகராட்சி, மண்டலம்4, வார்டு49 பகுதியில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., , மாநகராட்சி பணியாளர்கள், வாஷ் இன்ஸ்டியூட் மற்றும் ஹச்.சி.எல் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்ட தூய்மை பணிகளை துவக்கி வைத்து, தூய்மை பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டார்.




# "உரிமைகளை பாதுகாக்க வீரியமான அரசியல் தேவை!" மதுரையில் எஸ்.டி.பி.ஐ. தேசிய தலைவர் எம்.கே. பைஜு வலியுறுத்தல்

மதுரை, ஆக.9-

உத்தங்குடியில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மதுரை மண்டலம் சார்பில் மாவட்டம், தொகுதி மற்றும் கிளை நிர்வாகிகள் பங்கேற்ற தலைவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினரும், மதுரை மண்டல செயலாளருமான முஜிபுர் ரகுமான் தலைமை வகித்தார். மதுரை வடக்கு மாவட்ட தலைவர் பிலாலுதீன் வரவேற்றார்.நிகழ்ச்சியில் கட்சியின் தேசிய தலைவர் எம்.கே. பைஜு, தேசிய பொதுச்செயலாளர் மஜித் பைஜு, தேசிய பொருளாளர் அப்துல் சத்தார் ஆகியோருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சிறப்புரையாற்றிய எம்.கே. பைஜு, ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும், சமூக பாதுகாப்பை உறுதி செய்யவும் வீரியமான அரசியல் செயல்பாடுகள் அவசியம் என்றார்.

காவிரி நீர் உரிமை, தொகுதி மறுவரையறை, மதுரை எய்ம்ஸ் பணிகளை விரைவுபடுத்துதல், சிறுபான்மையினருக்கு தனி பட்ஜெட், வெறுப்பு பேச்சுக்கு எதிராக தனிச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# குறைதீர் கூட்டத்திற்கு அதிகாரிகள் வராததால் திருநங்கைகள் அதிருப்தி

திருப்பூர், ஆக.9-

திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு அதிகாரிகள் வராததால் திருநங்கைகள் அதிருப்தியடைந்தனர். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள திருநங்கைகள் தங்களது குறைகளை தீர்க்க ஏதுவாக அவ்வப்போது திருநங்கைகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் சமுக நலத்துறை சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த சில மாதங்களாக இந்த கூட்டம் நடத்தப்படவில்லை. இந்நிலையில், நேற்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்காக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருநங்கைகள் பலர் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து கூட்ட அரங்கில் காத்திருந்தனர். காலை 11 மணிக்கு கூட்டம் நடத்தப்படும் என அதிகாரிகள் கூறியிருந்த நிலையில் பகல் 12 மணிக்கு தான் அதிகாரிகள் கூட்ட அரங்கிற்கு வந்தனர். இதனால், 1 மணி நேரமாக திருநங்கைகள் கூட்ட அரங்கில் காத்திருந்தனர். மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி பிரவீனா தேவி வரவில்லை. இதனால் கண்காணிப்பாளர் செல்வக்குமார் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் சரவணன் ஆகியோர் கூட்டத்தை நடத்தினர்.

இது குறித்து திருநங்கைகள் கூறியதாவது: மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி தான் கூட்டத்தை நடத்த வேண்டும். ஆனால், அதிகாரி கூட்டத்திற்கு வரவில்லை. உரிய நேரத்திற்கு கூட்டம் நடத்தப்படாததால் பலர் அவதிக்குள்ளாகினர். துறை அதிகாரி வந்தால் தான் எங்கள் பிரச்னைகள் குறித்து தெரிந்துகொள்ள முடியும். எங்களது கோரிக்கைகள் குறித்து பலமுறை அதிகாரிகளிடம் மனுக்கள் கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

குறிப்பாக ஊர்க்காவல் படையில் 8 திருநங்கைகள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு குறைவாக பணி வழங்கப்படுகிறது. இதனை அதிகப்படுத்த வேண்டும். நிலுவையில் உள்ள மானிய தொகைகளை வழங்க வேண்டும்.குடியிருப்பு வழங்கியவர்கள் போக மீதமுள்ளவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும். கால்நடைகள் வளர்க்க அரசு நிலம் வழங்க வேண்டும். மாதந்தோறும் உரிய முறையில் கூட்டத்தை நடத்த வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி மீண்டும் மனு கொடுத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161